3.	வேளாண்மைப் பொறியியல் துறை	2.73	0.1989
4.	தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்.	12.64	0.3850
	மொத்தம் ..	47.39	2.1060

முடிவுரை.

இம்மாவட்டத்தில் 19-11-86 வரை மொத்தம் ரூ. 265.37 இலட்சம் வரை விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புப் பணிகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது. குடிநீர்ப் பணிகளுக்காக ரூ. 48.12 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், இம் மாவட்டத்தில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் வகையில் ரூ. 50 இலட்சம் வேறு பணியிலிருந்து திருப்பப்பட்டதன் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(இ). நாகர்கோவிலிலுள்ள நாகம்மாள் மில்ஸ் தொழிலாளர்கள் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஜே. ஹேமச் சந்திரன், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

நாகர்கோவிலிலுள்ள நாகம்மாள் மில்ஸ் லிமிடெட் என்ற நூற்பாலையில் சுமார் 370 தொழிலாளர்கள் பணியில் உள்ளனர். இந்த ஆலையில் குமரி மாவட்ட மில் தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யூ), குமரி, நெல்லை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் டி.என்.டி.யு.சி, நாகம்மாள் மில்ஸ் ஸ்டாப், ஜாபர்ஸ் அண்ட் எம்பிளாயீஸ் யூனியன், குமரி மாவட்ட நூற்பாலை தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (தொ.மு.பே) ஆகிய நான்கு தொழிற்சங்கள் இயங்குகின்றன.

1985-86ம் ஆண்டு போனஸ் பிரச்சினையில் தொழிற் சங்கங்கள் முன்னதாகவே வேலை நிறுத்த அறிவிப்புகள் கொடுத்து 27-10-1986 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்திருந்தன. இந்தப் பிரச்சினையில் நாகர் கோவில் தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) முன்பு முதலில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பயன் அளிக்காத தினால், திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்

கிடையில் தொழிலாளர்கள் 28-10-1986 அன்று காலையிலிருந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து நிர்வாகம் 30-10-1986 முதல் ஆலையில் கதவடைப்பை செய்துள்ளது.

திருநெல்வேலி, தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் தொழிற்சங்கத் தரப்பில் குறைந்த பட்சம் சைமா (Southern India Millowners Association) ஒப்பந்தப்படி 8.33 சதவீதம் போனஸ் மற்றும் வருகை நாள் ஒன்றுக்கு ரூ. 1.10 பைசா வீதம் கருணைத் தொகையும் கோரப்பட்டது. ஆனால் நிர்வாகத்தரப்பில் 8.33 சதவீதத்துக்கு உரிய தொகையை போனஸ் முன்பணமாக வழங்குவதைத் தவிர்த்து, வேறு எந்தவிதச் சலுகையும் கொடுப்பது சாத்தியமில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு ஒரு முடிவு ஏற்படவில்லை.

எனவே இப்பிரச்சினையில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண சென்னை, தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிர்வாகம்) முன்பு தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற உள்ளது. வேலை நிறுத்தமும், கதவடைப்பும் தொடர்ந்து நீடிக்கிறது. நிலைமை அமைதியாக உள்ளது. அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறவில்லை.

(ஈ). பேட்டை ஆலவாய்மொழி போன்ற இடங்களிலுள்ள கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1. பேட்டையிலுள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை போனஸ் பிரச்சினை.

திருநெல்வேலி பேட்டையிலுள்ள தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையில் 'ஏ' ஆலை 'பி' ஆலை என்ற இரு ஆலைகள் உள்ளன. 'ஏ' ஆலையில் சுமார் 814 தொழிலாளர்களும், 'பி' ஆலையில் சுமார் 848 தொழிலாளர்களும் பணிபுரிகின்றனர். இந்த இரு பிரிவு ஆலைத் தொழிலாளர்கள் ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு, தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை, அண்ணா தொழிற் சங்க பேரவை மற்றும் இதர சுயேச்சையாக பல தொழிற்சங்கங்கள் செயல்படுகின்றன.